வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 16.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்குவதை, சர்வதேச செலாவணி நிதியம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என, இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுக்களை, பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி, பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதம் குறித்து, இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூற, மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுடெல்லியில், உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான பன்முகமை மையத்தைத் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலமான 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், 96.9 சதவிகித மாணவ-மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

---

*ராஜ்நாத்-பூஜ் 1 (5)*

பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்குவதை சர்வதேச செலாவணி நிதியம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. இந்த உதவியில் பெரும் பகுதி, பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கே போய்ச் சேரும் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

*ராஜ்நாத்-பூஜ்* 2 (14)

(வாய்ஸ்)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று குஜராத் மாநிலம் பூஜ் விமானப் படை தளத்தில், விமானப் படை வீரர்களிடையே பேசுகையில், இன்றைய கால கட்டத்தில், பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் எந்தவொரு உதவியும், தீவிரவாதிகளுக்கான உதவியாகவே அமையும் என்றார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தானிய தீவிரவாத முகாம்களை தாக்கி அழிக்க, இந்திய விமானப் படையினர், 23 நிமிடங்களை மட்டுமே எடுத்துக் கொண்டதாகவும், இத்தகைய விரைவு செயல்பாட்டினால் இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்தியர்களுக்குப் பெருமை என்றும் அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் வலுவான செய்தியாகவே அமைந்து இருப்பதாகவும், இந்தியப் படைகளின் வலிமை, மற்றும், தயார் நிலையை இந்நடவடிக்கை வெளிப்படுத்தி இருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார். பாகிஸ்தானின் எந்த ஒரு மூலையையும் இந்தியா எட்ட முடியும் என்பது, சாதாரண விஷயம் அல்ல என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*ராஜ்நாத்-பூஜ்* 3 (3)

பூஜ் பகுதியில், 2001ஆம் ஆண்டு நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் நினைவாக கட்டப்பட்டுள்ள, ஸ்மிருதிவன் நினைவகம் மற்றும் அருங்காட்சியகத்தையும், இன்று திரு. ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

-----------------------

*காஷ்மீர்* (11)

தெற்கு காஷ்மீரின் குல்காம் மற்றும் புல்வாமா மாவட்டங்களில், கடந்த 48 மணி நேரத்தில், அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில், 6 தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்று, குறிப்பிடத் தகுந்த சாதனை ஒன்றை எட்டி உள்ளனர். பாதுகாப்புப் படையினர் அல்லது சிவிலியன்களுக்கு எந்த சேதமும் ஏற்படாமல், இந்த சாதனை எட்டப் பட்டுள்ளதாக, ஜம்மு-காஷ்மீர் காவல் துறை தலைவர் திரு. வி.கே. பர்டி தெரிவித்துள்ளார். மலைப் பகுதிகளில், உருகி ஓடும் பனியாறுகளுக்கு இடையே, பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை மேற்கொண்டு, வனப் பகுதிகளில் மறைந்து இருந்த தீவிரவாதிகள் மீது இவ்வாறு நடவடிக்கை எடுத்து இருப்பதாக, விக்டர் ஃபோர்ஸ் படைப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் தனஞ்செய் ஜோஷி கூறினார்.

-----------------------

*பிரதிநிதிக் குழு* (12)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, பாகிஸ்தானிய ஆதரவுடன் கூடிய தீவிரவாதம் குறித்து, இந்தியாவின் நிலைப்பாடுகளை, உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறும் வகையில், அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுக்களை, பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்க, மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. இத்தகைய ஒவ்வொரு குழுவிலும்,ஆளும் கட்சி, மற்றும், எதிர்கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் இடம்பெறுவார்கள்

என்றும், அடுத்த வாரம் முதல், இந்நடைமுறைகள் தொடங்கக் கூடும் என்றும், தகவல் வெளியாகி உள்ளது. ராஜியத் துறை ரீதியிலான இத்தகைய முன் முயற்சி குறித்து, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, தம்மிடம் பேசி இருப்பதாக, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

-----------------------

துருக்கி (13)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக பேசிய துருக்கி, மற்றும், அஜர்பைஜானுடன் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில், வர்த்தகத் தொடர்புகளை புறக்கணிக்க, இந்தியாவைச் சேர்ந்த 125க்கும் மேற்பட்ட, முன்னணி வர்த்தகத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். அகில இந்திய வர்த்தகக் கூட்டமைப்பு சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய மாநாட்டில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது. நெருக்கடியான நேரங்களில், இந்தியாவிடம் இருந்து பல்வேறு மனிதாபிமான உதவிகள், மற்றும், தூதரக ஆதரவைப் பெற்றுள்ள துருக்கியும், அஜர்பைஜானும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு நெருக்குதல் ஏற்பட்டுள்ள நேரத்தில், பாகிஸ்தானுக்கு ஆதரவாக பேசுவது, பெரிய துரோகம் என்றும், இது 140 கோடி இந்தியர்களை அவமதிக்கும் வகையில் அமைந்து இருப்பதாகவும், அகில இந்திய வர்த்தகக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

-----------------------

வாழ்த்து (12)

இன்று சிக்கிம் மாநிலத்தின் உதய நாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர், அம்மாநில மக்களுக்கு, வாழத்து தெரிவித்துள்ளனர். இயற்கை வனப்பிற்கும், வளமான கலாச்சார மரபுகளுக்கும், கனிவான மக்களுக்கும் பெயர் பெற்ற மாநிலம் சிக்கிம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார். சுற்றுச் சூழல் உணர்வு அதிகம் உள்ள மாநிலமான சிக்கிம், நீடித்த வளர்ச்சியின் சிறந்த எடுத்துக் காட்டாகவே மேம்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பல்வேறு துறைகளில் முக்கிய முன்னேற்றங்களை எட்டி உள்ள மாநிலம் சிக்கிம் என்றும், அம்மாநிலத்தின் 50ஆம் ஆண்டு உதய நாளாக இன்றைய தினம் அமைவது இன்னும் சிறப்புக்கு உரியது என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள ஊடகச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

----------------------

அமித் □ா (6)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுடெல்லியில், உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான பன்முகமை மையத்தைத் தொடக்கி வைத்தார். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வலுவான, அரசியல் மனஉறுதிக்கும், உளவு ஏஜென்சிக்களின் துல்லியமான தகவல்கள், மற்றும், முப்படைகளின் தாக்குதல் திறனுக்கும், சின்னமாகவே அமைந்து இருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார்.

-----------------------

*குமாரசாமி* (8)

மத்திய எஃகு மற்றும் கனரக தொழில் துறை அமைச்சர் திரு. ஹெச்.டி குமாரசாமி இன்று புதுடெல்லியில், எஃகுத் துறை அமைச்சகத்தின் புதிய இணைய தளத்தை தொடக்கி வைத்தார். எஃகுத் துறையுடன் தொடர்புடைய அனைவருக்கும், சரியான முக்கியத் தகவல்களை உடனுக்குடன் வழங்கும் ஆதாரமாக, இந்த இணைய தளம் செயல்படும் என அவர் கூறினார். புதுப்பித்து உருவாக்கப் பட்டுள்ள இந்த இணைய தளத்தில், அரசு இணைய தளங்களுக்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, சைபர் பாதுகாப்பு, மற்றும், பயனர் இடைமுக வசதிகள் இடம்பெற்றுள்ளன.

-----------------------

*பரம்வீர் சக்ரா 1 (7)*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் நிலையில், இந்தியப் படையினரின் வீரத்திற்கு நாடு தலை வணங்குகிறது. பாதுகாப்புப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில், ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு சிறப்பு தொடர் ஒன்றை தொடக்குகிறது. இதில் இன்றைய தினம், கார்கில் போரின் போது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த, பரம்வீர் சக்ரா விருதாளர் கேப்டன் விக்ரம் பத்ராவை, நாம் நினைவு கூர்கிறோம்.....

(வாய்ஸ்)

*பரம்வீர் சக்ரா* 2 (18)

(வாய்ஸ்)

ஹிமாச்சல் மாநிலம், பாலம்பூர் பகுதியைச் சேர்ந்து கேப்டன் பத்ரா, இந்திய ராணுவ அகாடமியில் பயின்று, 13ஆவது ஜம்மு-காஷ்மீர் ரைஃபிள்ஸ் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர். கார்கில் போரின் போது, ட்ராஸ் பகுதியில், போர் முக்கியத்துவம் அதிகம் உள்ள, பாயின்ட் 48 75 என்ற மலை உச்சியை கைப்பற்றும் பொறுப்பு, கேப்டன் பத்ரா தலைமையிலான படைப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டது. 1999 ஜூலை 7ஆம் தேதியன்று இரவு, பாயின்ட் 48 75 கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டு, கடினமான வானிலை நிலவரங்களுக்கு இடையிலும், தொடர்ந்து முன்னேறினார். கடுமையான உடற் காயங்களையும் மீறி, எதிரிகளை நோக்கி அவர் தவழ்ந்து சென்று, சொந்தப் பாதுகாப்பை கொஞ்சமும் கருதாமல், கையெறி குண்டுகளை வீசி, எதிரி நிலைகளை அழித்து அகற்றினார். முன்னணியில் நின்று வழிநடத்திய கேப்டன் பத்ராவின் தலைமையில், போர்ப் படையினர் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு, எதிரிப் படைகளின் சரமாரி குண்டுகளுக்கு இடையிலும் அசாத்தியமான ராணுவ சாதனையை செய்து முடித்தனர். பாயின்ட் 48 75 மலை உச்சியை இந்தியா கைப்பற்ற இயன்றதற்கு, கேப்டன் பத்ராவின் வீரச் செயலே காரணம் என்றாலும், போரில் பட்ட காயங்களால், துயரகரமாக அவர் உயிரிழந்தார். போர்க் காலத்தில், ரேடியோ கருவி மூலம் அவர் அனுப்பிய, யே தில் மாங்கே மோர் என்ற செய்தி, பின்னர்

கார்கில் போரின் வீர முழக்கமாகவே மாறியது. அவரது வார்த்தைகள், இன்றும் நம்மிடையே உணர்வலைகளை எழுப்பி வருகின்றன.

(பத்ரா வாய்ஸ்)

கேப்டன் விக்ரம் பத்ராவின் அசாதாரண துணிச்சல், மற்றும், கடமைப் பற்றும், சக வீரர்கள் உடனான அவரது தோழமை உணர்வும், இந்திய ராணுவத்தின் வரலாற்று ஏடுகளில் மேன்மையான இடம் ஒன்றை பிடித்துள்ளன. அவருக்கு, நாட்டின் மிக உயர்ந்த ராணுவ விருதான பரம் வீர் சக்ரா விருது, மரணத்திற்கு பிந்தைய முறையில் வழங்கப்பட்டது. கேப்டன் பத்ராவின் வீரம், துணிச்சல், மற்றும், தியாகத்திற்கு தலை வணங்குவோம்.

-----------------------

10ஆம் வகுப்பு (10)

தமிழ்நாடு அரசு தேர்வுகள் இயக்ககம், 10ஆம் வகுப்பு, மற்றும் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து தனியார் பள்ளிகள், 96.9 சதவிகித தேர்ச்சி விகிதம் காட்டி உள்ளன. மொத்தம் 4 ஆயிரத்து 290 மாணவ-மாணவிகள், 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியதில், 8 ஆயிரத்து 11 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் உள்ள தனியார் பள்ளிகளில், 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 7 ஆயிரத்து 539 மாணவ-மாணவிகளில், 7 ஆயிரத் 302 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 11ஆம் வகுப்பில் தேர்ச்சி விகிதம், 96.86 சதவிகிதமாக உள்ளது.

-----------------------

செல்வம் (10)

புதுச்சேரியில், மணவெளி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப் பேரவைத் தலைவருமான திரு.ஆர். செல்வம், தமது தொகுதிக்கு உட்பட்ட ஓடைவெளி சின்னவீராம்பட்டினம், நோனாங்குப்பம், இடையார் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், மொத்தம் 17 லட்சம் ரூபாய் மதிப்பிலான, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளை தொடக்கி வைத்தார். ஓடைவெளி சின்னவீராம்பட்டினத்தில், மீன் குட்டையை தூர் வாருதல், இடையார்பாளையத்தில், பக்க வாய்க்காலை ஆழப்படுத்துதல் ஆகிய பணிகளும் இதில் அடங்கும். வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. கார்த்திகேயன், ஊர் பஞ்சாயத்தார் மற்றும் பொது மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------

வானிலை (13)

அடுத்த 3 முதல் 4 நாட்களுக்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால்,கேரளா, மாகே, ஏனாம், கடலோர ஆந்திரா, மற்றும், தெலங்கானா, கர்நாடகாவில் ஓரிரு இடங்களில், இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய, கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஒருசில இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதே காலகட்டத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், ஒருசில இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ்

வரை வெப்பநிலை குறையலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. தென்தமிழகத்தின் கடலோரப் பகுதிகள். மன்னார் வளைகுடா, மற்றும், குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் வரும் 20ஆம் தேதி வரை, இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------

*ஏற்றுமதி-இறக்குமதி (10)*

இந்திய சரக்குகள் மற்றும் சேவைகளின் மொத்த ஏற்றுமதி, கடந்த ஏப்ரல் மாதத்தில், 73.8 பில்லியன் டாலராக, 12.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அமெரிக்க வரி உயர்வினால், உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற சூழ்நிலைக்கு இடையிலும், இந்தியாவின் ஏற்றுமதி, கணிசமாக வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக, உயர் மதிப்புள்ள மின்னணு மற்றும் பொறியியல் பொருட்களின் ஏற்றுமதியில், அதிக வளர்ச்சி எட்டப் பட்டுள்ளது. அதே சமயம் இந்தியாவின் இறக்குமதியும், கடந்த ஏப்ரல் மாதத்தில் 82.45 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதால், ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் மொத்தப் பற்றாக்குறை, 26.42 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்குவதை, சர்வதேச செலாவணி நிதியம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என, இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுக்களை, பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி, பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதம் குறித்து, இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூற, மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுடெல்லியில், உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான பன்முகமை மையத்தைத் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலமான 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், 96.9 சதவிகித மாணவ-மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது